அலகு - 3

நாவல் - புத்துமண்

நூல் ஆசிரியர் - சுப்ரபாரதிமணியன்

முன்னுரை

புதிய சூழலியல் விழிப்புணர்வு தோன்றியுள்ள சூழலில் உலகெங்கும் உள்ள கலை இலக்கியப் படைப்பாளிகள் தமது படைப்புகளில் சூழலியல் பேரழிவு குறித்தும் அந்தப் பேரழிவில் இருந்து உலகையும் மனித குலத்தையும் காப்பது குறித்தும் ஆராய்ந்து வருகின்றனர். சூழலியல் பேரழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கான தீர்வுகளையும் முன்வைக்கின்றனர். இந்நாவல் சுற்றுச்சூழல் அழிவுகளையும் அழிவிலிருந்து இந்தப் பூமியைக் காப்பதற்காக முன்வைத்த அரசியல் சிந்தனைகளையும் போராட்டத்தையும் ஆராய்கிறது.

கதைச்சுருக்கமும் மணியன் கதாபாத்திரமும்

புத்துமண் நாவலில் படைக்கப்பட்ட 'மணியன்' கதாபாத்திரம் கற்பனை கதாபாத்திரம் அல்ல. நடைமுறையில் வாழ்ந்த மனிதர். அவரது வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவங்களைச் சற்று கற்பனை கலந்த ஆவணப்பதிவுகளாக நாவலில் சித்திரித்துள்ளார் நாவலாசிரியர். மணியனின் மனைவி சிவரஞ்சனியும் மகள் தேனம்மையும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். மணியன் நாத்திகர். அறுபது வயதைத் தாண்டியவர். அதிகாரம் கூடாது என்பதற்காகப் பதவி உயர்வை ஏற்காது சாதாரண அரசு ஊழியராகவே விருப்ப ஓய்வு பெற்ற மணியன் உன்னத மனம் கொண்டவர். வீட்டில் வெட்டியாகப் பொழுது போக்க விரும்பாத அவர்

தி.க. கூட்டங்களோடும் இடதுசாரி கட்சிகளோடும் தொடர்பு கொண்டு அவர்கள் நடத்தும் கட்சி கூட்டங்கள், சமூக நீதிப் போராட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வார். பலர் அவரை தங்கள் கட்சிகளில் சேரச் சொல்லி வற்புறுத்துவார்கள். ஆனால் அவர் பொதுமனிதனாக வாழ விரும்பினார். வன தினம், தாய் மொழி காப்பு தினம், முதலான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூட்டங்களுக்குச் சென்று வருவார். சுற்றுச் சூழல் பிரச்சினைகள் குறித்துப் பத்திரிகைகளுக்குக் கடிதங்கள் எழுத ஆரம்பித்தார். திருப்பூர் வாசியான அவர் சாயப்பட்டறைகள் பற்றிய பொது விசாரணை, குறைகேட்பு நாள் என்று மாவட்ட ஆட்சியர் கூட்டங்களுக்குச் சென்று வந்ததோடு சாயப்பட்டறை சம்பந்தமான வழக்குகள் திருப்பூர் நீதிமன்றங்களிலோ கோவை நீதிமன்றங்களிலோ வரும் போது தவறாது கலந்து கொள்வார். மணியின் சில நண்பர்களுடன் சேர்ந்து வழக்கும் தொடர்ந்திருந்தார். இதனால் பெரிய சாயப்பட்டறை முதலாளிகளின் பகைமையைச் சம்பாதித்துக் கொண்டார்.

இதற்கிடையில் மகள் தேனம்மைக்குத் திருமணம் செய்து வைக்கிறார். மனைவி இறந்த பின் வீட்டை விற்று மகளுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு மீதிப்பணத்தைக் கொண்டு சுற்றுச் சூழல் பணிகளில் ஈடுபடுகிறார். பெரிய சாயப்பட்டறை முதலாளிகளின் தூண்டுதல் காரணமாகக் காவலாளிகள் அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்று எச்சரித்து அனுப்புகின்றனர். அத்தோடு

விடாமல் சாயப்பட்டறை முதலாளிகள் நைஜீரியன் ஒருவனுக்குப் பணம் தந்து மணியனை அடிக்கச் செய்கின்றனர். அந்த நைஜீரியன் பலமாகத் தாக்கியதில் மணியன் செத்துப் பிழைக்கின்றார். மனநலம் பாதிப்புக்குள்ளாகி ஈழத்தமிழர் விடுதலைக்காக முத்துக்குமாரும் செங்கொடியும் தீவைத்துத் தற்கொலை செய்து கொண்டது போல் தற்கொலை செய்து கொள்ளலாம் என்றும் ஏதாவது தற்கொலை முயற்சியால் உடம்பை அழித்துக் கொள்ளலாம் என்றும் மீத்தேன் வாயு எடுப்பதை முன்வைத்து உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்றும் மணியனின் மனம் எண்ணுகின்றது. மகள் தேனம்மை மணியனை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட அழைத்துப் போய் அங்கிருக்கும் சூழல் பிடிக்காததால் அழைத்து வருகிறாள். இறுதியில் மணியன் உடல் உபாதை காரணமாக இயற்கை மரணம் அடைகின்றார். ஆதிக்க வர்க்கங்களின் வன்முறை தாக்குதலால் ஒரு சமூகவியல் போராளியின் வாழ்வு அவலத்தில் முடிகிறது.

எந்த இயக்கத்திலும் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பாத அதேசமயம் அந்த இயக்கங்களின் செயல்பாடுகளின் உடன்பாடு இருக்கும் போது மட்டும் கலந்து கொள்பவராக மணியன் வாழ்ந்தவர் என்பதை ஜீவா என்ற கதாபாத்திரம் உருவதிலிருந்து மணியன் இயக்கங்கள் மீதோ சமூக மாற்றத்திற்கான போராட்டங்களின் மீதோ நம்பிக்கையற்றவராக இருந்துள்ளார் என்பதை அனுமானிக்க முடிகிறது.

சூழல் அழிவுக்கான காரணங்களும் தீர்வுகளும்

இயற்கை குறித்துக் கவலைப்படாத வளர்ச்சி என்ற பெயரின் வெறும் இலாப நோக்கத்தையும் சுய நலத்தையும் கருத்தில் கொண்ட தங்களால்தான் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகிறது என்பதை உணராத ஏகபோக முதலாளிகளின் குரல்களைப் பதிவு செய்துள்ளார்.

முடிவு :

புத்துமண் நாவல், நடைமுறையில் வாழ்ந்தவராகக் கருதப்படும். சூழலியல் போராளி மணியன் பற்றியும் பசுமை இயக்கம் தலைவர் வெ. ஜீவானந்தம், திக. கட்சி தலைவர்கள், பொது உடைமை வாதிகள், ஏனைய சூழலியலாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனர்கள், தலைக் போராளிகள் எனப் பலரோடு அவருக்கு இருந்த தொடர்பும் நட்புப் பற்றியும் விவரிக்கும் இலக்கியல் நாவல் ஆகும்.

பேரியக்கங்களிலும் சமூகமாற்றங்களிலும் நம்பிக்கை இன்றித் தனி ஒரு மனிதனாய் மனிதநேய உணர்வுடன் வாழ்ந்த (சித்திரிக்கப்பட்ட) மணியன் தனிப்பட்ட முறையில் உன்னத மனிதன். தனிமனிதனாகப் போராடி வெல்வது எந்தத் தத்துவ பின்னணியும் இல்லாத திரைக்கதையில் சாத்தியம். நடைமுறையில் ஒருபோதும் சாத்தியம் இல்லை.

சமதர்ம பெண்ணியத் தத்துவப் பெண்ணியல் மாவையும் சூழலியல் இயக்கம் உருவாகி, சாதி, மதம், இனம், மொழி கடந்து பூமியை - இயற்கையை மற்றும் நேசிக்கின்ற உழைக்கும் வர்க்கம் ஒன்று சேர்ந்து நடத்தும் போராட்டமே வலிமை வாய்ந்த போராட்டமாக அமையும். அப்போராட்டத்தை ஒடுக்க முடியாமல் ஆதிக்க வர்க்கங்கள் வலிமை இழந்து அவையும் இயற்கையையும் சூழலையும் பாதுகாக்க முன்வரும். ஆகவே மக்கள் ஒன்றுபட்டு இயற்கையை பூமியைக் காப்பதின் அவசியத்தைப் இந்நாவல் உணர்த்துகின்றது

## வினாக்கள்

1. புத்துமண் நாவலில் இடம்பெறும் கதாப்பாத்திரப் பெயர்கள் நான்கினைக் கூறுக.
2. மணியன் கதாப்பாத்திரம் உணர்த்தும் மையக் கருத்தினை விவரி.
3. புத்துமண் நாவல் காட்டும் சுற்றுச் சூழல் பிரச்சினைகளைத் தொகுத்துரைக்க.
4. சூழல் அழிவுக்கான காரணங்களும் தீர்வுகளும் குறித்து எழுதுக.
5. புத்துமண் நாவல் உணர்த்தும் மையக்கருத்தினை கட்டுரைக்க.